சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்
முன்னிலை :– திரு.சி.கதிரவன், B.Sc., B.L.,
சார்பு நீதிபதி,
இராமநாதபுரம்.
2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
CNR No.TNRM04–000042–2012
I.A.No. 01/2024
In
O.S.No.57/2012

01. ஏ.எம்.செய்யது அகமது
02. ஏ.எம். முஹமது ஹமீது(இறப்பு )
03. ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் (இறப்பு)
04. ஏ.எம்.அப்துல் மாலிக்
05. செய்யது சுல்தான் பீவி
06. உம்முல் கைர்சித்திகா
07. மஜீதத்துல் ஆமினா
08. ஜீனத்து மர்லியா
09. முகம்மது மஜீத்து நிஷா பீவி
10. அஹமது பாய்ஸ்
(2 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அவளது
அதிகார முகவரான 1 ம் எதிர்மனுதாரர் மூலம்)
11. எஸ்.ஐ.ஏ.பௌசுல் அமினா
12. எஸ்.ஏ.அஹ்மது சபீக்
13. எஸ்.ஏ.ஜமீன் முகைதீன்
14. எஸ்.ஏ.மைனர் அஹ்மது முஸ்தாக்
(மேற்படி 14 ம் மைனர் எதிர்மனுதாரரின் தாயும்,
கார்டியனுமான எஸ்.ஐ.ஏ. பௌசுல் அமினா மூலம்)
15. ஏ.எம்.முஹமது சாபி
16. முகம்மது கஜிதாபீவி

............. மனுதாரர்கள் / வாதிகள்.

/ எதிர் /

1. ஜீ.வீரபாண்டியன்
2. ஆண்டியப்பன்
3. ஆறுமுகம்

...... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.04.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி. நடராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். பாலாஜி, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனு சி.பி.சி பிரிவு 151 ன் படி 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள டைரி குறிப்பை நீக்கம் செய்து வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா. 1 ஐ முதல் 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்காதிருக்கும்படி உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :–

மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கேட்டு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதில் இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து ஷை வழக்கினை நடத்தி வருவதில் இருதரப்பு விசாரணையும் முடிவுற்று இறுதியில் இருதரப்பு வாதுரையும் செய்யப்பட்டு முடிவுறும் போதுதான் இந்த 4 முதல் 8 பிரதிவாதிகள் தங்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமெனக் கோரி ஐ.ஏ.எண். 109/2020 மனு தாக்கல் செய்து அந்த மனுவிற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்

ஆட்சேபனை இல்லை என்று கூறியதால் 4 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஷையார்கள் தரப்பில் எதிர்வழக்குரையும், அதற்கு இந்த வாதிகள் பதில் வழக்குரை தாக்கல் செய்து பின்னீடு வாதிகள் தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ததில் 02.04.2024 அன்று குறுக்கு விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றையதினம் இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முயன்றபோது தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்ட விபரம் தெரியவந்து மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு அதன் பேரில் இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது. வாதிகளின் வழக்குரைக்கு இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் இந்த 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள முகம்மது சதக், காதர்பாத்திமா மூலம் தான் தங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு பாத்தியம் என்றும், ஷை முகம்மது சதக், காதர்பாத்திமாவின் வாரிசுகளான முகைதீன் இப்ராகிம் சாகிபு, முகைதீன் இப்ராஹிம்மாள், முகம்மது ஆயிசா அம்மாள் ஆகியோர் ஷை சொத்தினை அடைந்து அனுபவித்து வந்தனர் என்றும், வாதியின் முன்னவர்களான அப்துல் மஜீது சகோதரர்கள், பிரதிவாதிகள் முன்னவர்களாக முகைதீன் இப்ராகிம் சாகிபுவிடமிருந்து 20.10.1945 ல் ஒத்தியாக பெற்றும் பின்பு 10.05.1948, 24.12.1954 ஆகிய தேதியிட்ட இருகிரைய பத்திரங்கள் மூலம் முகைதீன் இப்ராகிம் சாகிபுவின் வாரிசுகளான முகைதீன் சதக்கத்துல்லா வகையறாவிடமிருந்து கிரையமாக பெற்று 7 1/2 ஏக்கர் நிலத்தை அனுபவம் செய்து வந்தனர் என்றும், மேற்படி 7 1/2 ஏக்கர் நிலம் போக பாக்கியுள்ள 2 1/2 ஏக்கர் நிலம் தான் தாவா சொத்து என்றும், மேற்படி 2 ½ ஏக்கர் நிலத்தை முனைதீன் இப்ராகிம் சாகிபு இறந்தபிறகு அவரது வாரிசுகளான பச்சைக்கிளி (எ) செய்யது பாத்திமான மற்றும் முகைதீன் இப்ராகிம் மக்கள் நூதுல்

மருலியா, நூருல் கபிலா மற்றும் அவரது மகன் முகமது சதக்கத்தலி ஆகியோர் மேற்படியார்கள் எதிர்வழக்குரை பாரா 14 மற்றும் 15 ல் கண்டுள்ள விபரங்களின்படி வீரபாண்டியன் கிரையம் பெற்று 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாகவும் அதன் படிக்கு 2ம் பிரதிவாதிக்கு 2 ஏக்கர் 40 சென்ட் பாத்தியப்பட்டது என்றும் மற்றும் பிற விபரங்கள் கூறியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கின்றனர். 2ம் பிரதிவாதி மற்றும் வீரபாண்டியன் ஆகியோர் பெற்ற கிரைய ஆவணங்களை பயன்படுத்தி தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரச்சனை செய்ய முயன்றதால் இந்த வாதிகள் தரப்பில் பிராது தாக்கல் செய்யும் முன்பே ஷையார்களது ஷை ஆவண நகல்கள் பெற்று விபரங்கள் சேகரித்து அதன்படி பிராதில் தெளிவாக விபரங்கள் கூறி பிராது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 1ம் பிரதிவாதி பிரஸ்தாபிக்கும் அதிகார ஆவணம் மற்றும் 2ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள 07.03.2012 ம் தேதிய ஆவணங்களில் கண்டுள்ள விரங்களின் அடிப்படையில் இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள 10.05.1948 மற்றும் 29.12.1954 ஆகிய இரு கிரைய ஆவணங்களில் கண்ட சொத்தும் மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள 17.10.1947 ம் தேதிய சொத்தும் சேர்ந்த மொத்த சொத்தையும் முகம்மது சதக் வகையறாவிடமிருந்து இந்த வாதிகளின் முன்னவர் கிரையம் பெற்றுவிட்டதாகவும், அவ்வாறு ஷை 3 ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்ற சொத்து தாவா 1வது லக்க சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்து என்றும், மற்றும் அதனை சதக் ட்ரஸ்ட் கிரையம் பெற்றுள்ளது என்றும், பிற விபரங்கள் கூறியும் பிராது தாக்கல் செய்யப்பட்டு தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தின் ஆவணங்கள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றின் பேரில் இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சியை மிக விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு அதன்பின்

பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்களும் விடப்பட்டு பின்னர் அதுவும் முடிக்கப்பட்டு உபயதரப்பு வாதுரையும் செய்யப்பட்டு முடியும் நிலையில் தான் இந்த 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்கப்பட்டு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளனர். முன் கூறப்பட்டுள்ள மூன்று கிரைய ஆவணங்களில் 10.05.1948 ம் தேதிய கிரைய ஆவணம் தான் இந்த 4 முதல் 8 பிரதிவாதிகள் கிளைம் செய்யும் முகைதீன் இப்ராகிம் உம்மாளின் மக்களும் இந்த வாதிகளின் முன்னோர்களுக்கு கிரையம் கொடுத்த ஆவணம் ஆகும். அவ்வாறு இந்த 4 முதல் 8 பிரதிவாதிகள் பாத்தியம் கோரும் ஷை இப்ராகிம் அக்தமும் சேர்ந்து ஷை வாதியின் முன்னோர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டதனை மறைத்து ஷையார்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாலும் ஷை முழுவிபரங்களையும் கூறி பதில் வழக்குரை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் கூடுதல் நிரூபண வாக்குமூலமும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலையில் ஷை 4 முதல் 8 பிரதிவாதிகள் மட்டும் தன் வாதிகள் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியுமே தவிர 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் அவர்கள் தரப்பு வழக்குக்கு ஏற்ப ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்த நிலையில் ஷை வா.சா. 1 ஆன வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யக்கூடியதில்லை. வா.சா.1 ஐ ஏற்கனவே 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ள நிலையில் 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு கிளைமை மறுக்கும் வகையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் நிரூபண வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சியை மறுபடியும் எந்த வகையிலும் குறுக்கு விசாரணை செய்யக்கோருவது ஏற்கத்தக்கதல்ல.

3) 1 **<u>முதல் 3 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–**

மனுதாரரின் அபிடவிட்டில் கண்ட விபரங்களில் கீழே ஒப்புக்கொள்ளும் விபரங்கள்தவிர மற்ற விபரங்கள் முற்றிலுமான மறுக்கப்படுகிறது. இவ்வழக்கு சுமார் 6 வருடங்களுக்கு முன்பு உபய தரப்பு விவாதஉரையிம் கேட்கப்பட்டு தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் B 14 முதல் 16 வரையான ஆவணங்கள் காணாமல் போய்விட்டது. இதன் காரணமாக வழக்கானது சுமார் 3 வருடங்களுக்கு மேலாக தீர்ப்புரை பகரப்படாமல் இருந்து வந்தது. காணாமல் போன ஆவணங்களை மறு சீரமைப்புச் செய்து அதன்படி எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மூன்று ஆவணங்களும் மறு சீரமைக்கப்பட்டு வழக்கானது மீண்டும் விவாத உரைக்காக போடப்பட்டது. வழக்கில் புதிதாக பிரதிவாதிகளைச் சேர்க்க மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கூட்டு சேர்ந்து கொண்டு சில நபர்கள் அவசிய கட்சிக்காரர்களை சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அதன் புதிதாக சேர்க்கப்பட்ட பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதற்கு பதில் வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டது. இந்நிகழ்வு முடிவதற்கே சுமார் 2 1/2 வருட காலங்கள் ஆகிவிட்டது. வாதிகள் தர்ப்பு சாட்சியை கூண்டில் ஏற்ற நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டு அவர்கள் சாட்சி சொல்ல முன்வராததால் அவர்கள் சாட்சியம் முடிக்கப்பட்டது. அதை சரிசெய்ய மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவும் சமூகம் நீதிமன்றத்தில் ரூ. 8000/– வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டது. மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் சாட்சி கூண்டில் ஏறிய நிலையில் தற்போது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவரை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்கள் தரப்புக்கும் புதிதாக சேர்க்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பிற்கும்

வாய்ப்பளிக்கப்பட்டு இருந்த நிலையில் புதிதாக சேர்க்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பில் சமூகம் நீதிமன்றத்தில் 02.04.2024 அன்று குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆகிய எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற உத்தரவின்படி குறுக்கு விசாரணைக்கு தயாராக இருந்த நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்ககூடாது என்று மனுதாரர்கள் / வாதிகள் மனுதாக்கல் செய்வது வழக்கை காலதாமதம் செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இந்த மனுவை தள்ளுபடிசெய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால், வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1 ன் கூடுதல் முதன்மை சாட்சியம் குறித்து குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகளை அனுமதிக்காமல் உத்தரவிடவேண்டுமா ? இல்லையா ? என்பதேயாகும்.

5) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு மனுவின் சாராம்சம் என்னவென்றால், தாவா சொத்துக்கள் மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் அதன் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களில் தங்களுக்கு 2 ஏக்கர் 40 சென்டு உரிமை உள்ளது என்று எதிர்வாதம் செய்யப்பட்டு வருகிறது என்றும், அசல் வழக்கானது வாதுரைக்காக வந்தபோது 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் தங்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றும், 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களில் தங்களுக்கு 8/48 பாகம் இருப்பதாக எதிர்வாதம் செய்யப்பட்டு வருகிறது என்றும், இதை எதிர்த்து மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கூடுதல் பதில் வழக்குரை தாக்கல் செய்து அதன் அடிப்படையில்

வா.சா. 1 கூடுதல் முதன்மை சாட்சியமும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வா.சா. 1 தாவா சொத்துக்களில் 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே வா.சா. 1 ஐ கூடுதல் விசாரணை செய்வதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதாகும்.

7) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு எதிர்உரையிலிருந்து இந்த நீதிமன்றம் தெரிந்து கொள்வது என்னவென்றால், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளை குறுக்கு விசாரணை செய்யக்கூடாது என்று கூறுவதற்கு மனுதாரர்கள் / வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

8) மனு மற்றும் எதிர்உரை பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கானது வாதிகளால் விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு வாதுரைக்காக வந்தபிறகு 4 முதல் 8 பிரதிவாதிகள் தங்களுக்கு தாவா சொத்துக்களில் 8/48 பாகம் இருப்பதாக மனு தாக்கல் செய்து அந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு அவர்கள் 4 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4 முதல் 8 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை மறுத்து மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் Replication தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த கூடுதல் பதில்வழக்குரையின் அடிப்படையில் வா.சா. 1 கூடுதல் முதன்மை சாட்சியம் தாக்கல் செய்து 4 முதல் 8 பிரதிவாதிகளால் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் வா.சா. 1 ஐ, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஆட்சேபனை செய்து வாதிகள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் வா.சா 1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுமதி

அளிக்க வேண்டுமா ? இல்லையா ? என்று பார்க்கும்போது, வா.சா. 1 தன்னுடைய கூடுதல் முதன்மை சாட்சியத்தில் தாவா சொத்து தங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், 4 முதல் 8 பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். எனவே 1 முதல் 3 பிரதிவாதிகளும், 4 முதல் 8 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து செயல்படுகிறார்கள் என்று 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வைத்துள்ள நிலையில் அதுகுறித்து நிச்சயமாக குறுக்கு விசாரணை செய்வதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளை அனுமதிக்க வேண்டும். தாவா சொத்துக்கள் தங்களுக்கு மட்டும் தான் பாத்தியம் என்று கூடுதல் முதன்மை சாட்சியத்திலும் வா.சா.1 கூறியுள்ள நிலையில் அதை மறுத்து குறுக்கு விசாரணையில் Suggestion கேள்விகள் கேட்பதற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளை அனுமதிக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா. 1 ஐ 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக உள்ள அம்சங்கள் குறித்தும் 1 முதல் 3 பிரதிவாதிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் 1 முதல் 3 பிரதிவாதிகளை குறுக்குவிசாரணை செய்வதற்கு அனுமதிக்கவில்லை என்றால் வாதிகளும் 4 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து செயல்பட்டார்கள் என்று கூறுவதற்கும் வாய்ப்பாக அமையும். எனவே இந்த நீதிமன்றமானது நீதியின் நலன் கருதி வா.சா.1 கூடுதல் முதன்மை சாட்சியத்திலும் வா.சா. 1 ஐ 4 முதல் 8 பிரதிவாதிகள் செய்த குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் உள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிரான சங்கதிகளை பொறுத்து மட்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகளைப் பொறுத்தவரை வா.சா. 1 ன் கூடுதல் முதன்மை சாட்சியத்திலும் மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகள் செய்த குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் உள்ள அவர்களுக்கு எதிரான சங்கதிகளைப் பொறுத்து மட்டும் வா.சா. 1 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராமநாதபுரம்

.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

சார்பு நீதிபதி,
இராமநாதபுரம்.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2024.04.12 18:28:56 +0530

I.A.No.01/2024
In
O.S.No. 57/2012

**12.04.2024**

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

முடிவாக இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகளைப் பொறுத்தவரை வா.சா. 1 ன் கூடுதல் முதன்மை சாட்சியத்திலும் மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகள் செய்த குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் உள்ள அவர்களுக்கு எதிரான சங்கதிகளைப் பொறுத்து மட்டும் வா.சா. 1 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

சார்பு நீதிபதி,
இராமநாதபுரம்.

Sub Court,
Ramanathapuram
I.A.No.01/2024
In
O.S.No.57/2012
Fair / Draf Order
12.04.2024

சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்
முன்னிலை :– திரு.சி.கதிரவன், B.Sc., B.L.,
சார்பு நீதிபதி,
இராமநாதபுரம்.
2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
CNR No.TNRM04–000042–2012
I.A.No.1/2024
In
O.S.No.57/2012

1. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் செய்யது இப்ராகீம் அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 63 வயதுள்ள முகைதீன் இபுறாகிம் உம்மா.

2. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மனைவி முஸ்லிம் சுமார் 53 வயதுள்ள ஷாஜஹான் பீவி,

3. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 37 வயதுள்ள பாத்திமா பர்வீன்,

4. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 34 வயதுள்ள சிரின் நஜிமா பர்வின்

5. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 29 வயதுள்ள பாத்திமா தஸ்ரின் பர்ஷானா

..... மனுதாரர்கள்/உத்தேச 4 முதல் 8

பிரதிவாதிகள்

/எதிர்/

1. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/39, நடுத் தெருவில் வசித்து வரும் எஸ்.வி.எம்.அப்துல் மஜீது அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 60 வயதுள்ள ஏ.எம்.செய்யது அகமது.

2. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/39, நடுத் தெருவில் வசித்து வரும் எஸ்.வி.எம்.அப்துல் மஜீது அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 65 வயதுள்ள ஏ.எம். முஹமது சாகுல் ஹமீது.

3. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/55, நடுத்தெருவில் வசித்து வரும் எஸ்.வி.எம். அப்துல் மஜீது அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 55 வயதுள்ள ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் (இறப்பு).

4. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/45A, நடுத்தெருவில் வசித்து வரும் எஸ்.வி.எம். அப்துல் மஜீது அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 49 வயதுள்ள ஏ.எம்.அப்துல் மாலிக்.

5. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண். 18/64 பி, வடக்கு தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.செய்யது முஹமது அப்துல் காதர் அவர்கள் மனைவி முஸ்லிம் சுமார் 67 வயதுள்ள செய்யது சுல்தான் பீவி.

6. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண். 18/64 பி, வடக்கு தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.செய்யது முஹமது அப்துல் காதர் அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 37 வயதுள்ள உம்முல் கைர்சித்திகா.

7. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு

எண். 18/64 பி, வடக்கு தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.செய்யது முஹமது அப்துல் காதர் அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 35 வயதுள்ள மஜீதத்துல் ஆமினா.

8. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண். 18/64 பி, வடக்கு தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.செய்யது முஹமது அப்துல் காதர் அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 31 வயதுள்ள ஜீனத்து மர்லியா.

9. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/41, நடுத் தெருவில் வசித்து வரும் முஹமது சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 30 வயதுள்ள முகம்மது மஜீத்து நிஷாபீவி.

10. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/41, நடுத் தெருவில் வசித்து வரும் முஹமது சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 28 வயதுள்ள அஹமது பாய்ஸ்.

(2 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அவளது அதிகார முகவரான 1 ம் எதிர்மனுதாரர் மூலம்)

11. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/55, நடுத் தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் அவர்கள் மனைவி முஸ்லிம் சுமார் 51 வயதுள்ள எஸ்.ஐ.ஏ.பௌசுல் அமினா.

12. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/55, நடுத் தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் அவர்கள் குமாரர் முஸ்லிம் சுமார் 45 வயதுள்ள எஸ்.ஏ.அஹ்மது சபீக்.

13. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/55, நடுத் தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் அவர்கள் மகன் முஸ்லிம் சுமார் 46 வயதுள்ள எஸ்.ஏ.ஜமீ முகைதீன்.

14. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/55, நடுத் தெருவில் வசித்து வரும் லேட்.ஏ.எம்.முஹமது சுல்தானுல் ஆரிபின் அவர்கள் மகன் முஸ்லிம் சுமார் 16 வயதுள்ள எஸ்.ஏ.மைனர் அஹ்மது முஸ்தாக்

(மேற்படி 14ம் மைனர் எதிர்மனுதாரரின் தாயும், கார்டியனுமான எஸ்.ஐ.ஏ. பௌசுல் அமினா மூலம்)

15. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.18/73E, வடக்குத் தெருவில் வசித்து வரும் எஸ்.வி.எம்.அப்துல் மஜீது அவர்கள் குமாரர் முஸ்லீம் சுமார் 66 வயதுள்ள ஏ.எம்.முஹமது சாபி.

.... 1 முதல் 15

எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

16. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் டவுன், வெளிப்பட்டிணம் அஞ்சல், பாலசுப்பிரமணிய கோவில் தெருவில் வசித்து வரும் குருசாமி அவர்கள் குமாரர் இந்து சுமார் 53 வயதுள்ள ஜீ.வீரபாண்டியன்.

17. புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டம், க.எண்.2/107 கிடங்கிவயல் கிராமத்தில் வசித்து வரும் ராமையா அவர்கள் குமாரர் இந்து சுமார் 45 வயதுள்ள ஆண்டியப்பன்.

18. புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டம், க.எண்.2/107 கிடங்கிவயல் கிராமத்தில் வசித்து வரும் ராமையா அவர்கள் குமாரர் இந்து சுமார் 42 வயதுள்ள ஆறுமுகம்.

..... 16 முதல் 18 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனு சி.பி.சி ஆர்டர் 1 ரூல் 10(2)–ன் படி மனுதாரர்களை அசல் வழக்கில் 4 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 23.12.2020

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.12.2021ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/உத்தேச 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 15 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.நடராஜன் அவர்கள் ஆஜராகியும், 16 முதல் 18 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவாணை**

1. இந்த மனு அனுமதித்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. மனுதாரர்களை அசல் வழக்கில் 4 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்துவதற்கு உத்தரவிடப்படுகிறது.
3. இந்த மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை விதிக்கப்படவில்லை.

உபய தரப்பில் செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை.

உத்தேச கட்சிக்காரர் பற்றிய விபரம் :

1. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் செய்யது இப்ராகீம் அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 63 வயதுள்ள முகைதீன் இபுறாகிம் உம்மா.

2. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மனைவி முஸ்லிம் சுமார் 53 வயதுள்ள ஷாஜஹான் பீவி,

3. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு

எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 37 வயதுள்ள பாத்திமா பர்வீன்,

4. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 34 வயதுள்ள சிரின் நஜிமா பர்வின்

5. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாகா, கீழக்கரை டவுன், கதவு எண்.11/100, வள்ளல் சீதக்காதி சாலையில் வசித்து வரும் முகைதீன் சதக்கத்துல்லா அவர்கள் மகள் முஸ்லிம் சுமார் 29 வயதுள்ள பாத்திமா தஸ்ரின் பர்ஷானா.

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

சார்பு<br>நீதிப<br>தி,<br>இராம<br>நாதபுர<br>ம்.